65

ஜூலை 86

60 காசு

ஜெயகாந்தன் இந்தி பிரச்சார சபா தலைவரா?

பேபி பவுடரால் ஆபத்து

1

வைரமுத்துவின் சினிமா தந்திரம்

அரிசி விலை ரூ. 47 2001-ல் விலைவாசி

FREE E - BOOKS , www.thamizham.net.,

# புதிய கல்வித் திட்டம் இதை மாற்றவில்லையே!

40% பள்ளிகளில் எழுதுவதற்கே கரும் பலகைகள் கிடையாது.

70% பள்ளிகளில் நூலகங்களே கிடையாது.

53% பள்ளிகளில் மாணவர்கள் விளையாடுவதற்கு மைதானமே கிடையாது:


59% பள்ளிகளில் குடிப்பதற்குக் குடிநீர் வசதி கிடையாது.

85% பள்ளிகளில் சிறுநீர் கழிப்பிடங்கள் கிடையாது.

53% பள்ளிகளுக்குக் கட்டிட வசதி கிடையாது.



FREE E - BOOKS , www.thamizham.net.,



**கொள்ளைக்காரன் எம்.எல்.ஏ.**

பீகாரின் தான்பூரிலிருந்து தேர்ந்தெடுக்கப்பட்ட சுயேட்சை எம்.எல்.ஏ. இவர். 15 குற்ற வழக்குகள் இவர் மேல் பதிவாகியுள்ளன. பெரும்பாலவை, கொள்ளையடித்த குற்றச் சாட்டுகள். விலங்கு மாட்டிங்கொண்டு தான் வேட்பாளர் மனு செய்து வர அனுமதிக்கப்பட்டார். சிறையிலிருந்து கொண்டே வெற்றியும் பெற்றார்.

குற்றவாளிகளின் புகலிடமாக பீகார் அரசியல் மாறியிருக்கிறது. சட்ட விரோத செயல்களில் ஈடுபட்ட 100 பேர்கள் தேர்தலில் போட்டியிட்டு 24 பேர் சட்ட மன்றத்திற்குத் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளனர்.

FREE E - BOOKS , www.thamizham.net.,

# ஆஸ்திரிய தேர்தலும்

இரண்டாம் உலகப் போரின் போது இட்லரின் ராணுவப் பிரிவில் பணிபுரிந்து யூத மக்கள் படுகொலையில் பங்கேற்றார் என்பதுதான் அந்தக் குற்றச் சாட்டு.

ஜெர்மானிய ஆட்சியில் பணியாற்றியது உண்மை. ஆனால் படுகொலையில் எனக்கு எந்தப் பங்கும் இல்லை என்பது வால்டிமின் வாதம்.

ஐ. நா. பொதுச் செயலாளராக இரண்டு முறை தேர்வு பெற்று பாராட்டுதலுடன் பணியாற்றி ஓய்வு பெற்றவர் குர்ட் வால்டிம்.. இவர் ஆஸ்திரிய நாட்டின் ஜனாதிபதியாக அமோக வெற்றி பெற்றுள்ளார்.

இவரது வெற்றியால் எரிச்சலடைந்த இஸ்ரேல் தனது தூதரை ஆஸ்திரியாவிலிருந்து வாபஸ் பெற்றுக் கொண்டுள்ளது. இதற்குக் காரணமாக வால்டிம் மீது கடுமையான குற்றச் சாட்டை அது முன் வைத்துள்ளது.

தேனெடுத்தவன் அதைச் சுவைக்காமல் இருந்திருக்க மாட்டான் என்பது பழமொழி. எனவே இட்லர் சம்பந்தப்பட்ட அனைவருக்குமே - அரண்மனை வாயிற்காப்போனாக இருந்திருந்தாலும்—அதில் தனக்குரிய பங்கு உண்டு என்பதை மறுக்க இயலாது. எனவே இட்லரின் பாசிஸ்ட் கும்பலில் இவர் 'பார்வையாளராக' இருந்ததும் பெரும் குற்றமே.

இருப்பினும் ஏறக்குறைய நாற்பதாண்டு காலம் மௌனித்து விட்டு வால்டிம் பதவியில் இருந்த போதெல்லாம் சும்மா இருந்துவிட்டு இப்போது கூப்பாடு போடுவது ஏன்?

இட்லரிடமிருந்து விடுபட்ட இஸரேலியர்கள் இன்று இட்லரையும் தோற்கடிக்கக் கூடிய அளவுக்கு கொலை பாதகர்களாக மாறியிருக்கிறார்கள் என்பதை மறுக்க முடியாது. எனவே இன்றைய கொலைகாரர்கள், நேற்றைய கொலைகளுக்கு உடந்தையாக இருந்தார்கள் என்று எவரையும் குற்றம் சாட்ட யோக்கியதை இல்லாதவர்கள்.

—டி. எஸ். ரவீந்திரதாஸ்

FREE E - BOOKS , www.thamizham.net.,

# சிமெண்ட் 50 கிலோ ரூ 190 (3 ரூ)

1947 லிருந்து 1986 வரை இந்தியாவின் இரண்டுங் கெட்டான் பொருளாதார அமைப்பில், விலைவாசிகள் கட்டுப் பாடின்றி ஏறிய விகிதப்படி கணக்கிட்டுப் பார்க்கும் போது, 2001 ஆம் ஆண்டு விலைகள் கீழ்க்கண்டவாறு இருக்கும் என நிபுணர்கள் மதிப்பிடுகிறார்கள்: அடைப்புக் குறிக்குள் இருப்பது 1947 சுதந்திரமடைந்த ஆண்டு உள்ள விலை. இன்றைய விலை நிலவரத்தோடு- விலை வேகத்தை ஒப்பிடுக.

| | | | |
|---|---|---|---|
| அரிசி | : | கிலோ | ரூ 47 (65 பைசா) |
| கோதுமை | : | ,, | ரூ 14 (26 பைசா) |
| காபி | : | ,, | ரூ 78 (ரூ 2-50) |
| டீ | : | ,, | ரூ 140 (ரூ 2-75) |
| வனஸ்பதி | : | ,, | ரூ 56 (ரூ 1-50) |
| சர்க்கரை | : | ,, | ரூ 13 (60 பைசா) |

மண்ணெண்ணெய் லிட்டர் ரூ 6 (23 பைசா)

பெட்ரோல் லிட்டர் ரூ 32 (40 பைசா)

தங்கம் 10 கிராம் ரூ 9750 (ரூ 102)


இந்த விலையேற்றத்திற்கு இணையாக நடுத்தர, ஏழை மக்களின் வருவாய் உயரவில்லை. நம் பாட்டனார்கள் பொருட்களை மணங்கு (37 கிலோ) என்ற அளவில் வாங்கினார்கள். நாம் கிலோவில் வாங்குகிறோம். நம் குழந்தைகள் இனி கிராமில் தான் வாங்க வேண்டியிருக்கும்.

புரட்சிகரமான மாறுதல்கள் வராவிடில் கி.பி 2000க்குப் பின் நமது மூச்சுத் திணறல் தாங்க முடியாததாகிவிடும்.

—இ. ஜே. சுந்தர்

FREE E - BOOKS , www.thamizham.net.,

# வைரமுத்துவின் சினிமாதந்திரங்கள்



வைரமுத்து மற்ற சினிமா கவிஞர்களிலிருந்து மாறுபட்டவர். 100/- கவிஞர்;சமூகப் பார்வையுடையவர்; என்பதில் நாம் மகிழ்ந்தாலும், அவரது சமீபத்திய போக்கு கவலை தருவதாக உள்ளது. இக்கட்டுரையாளரின் கோபம் அவரைச் சிந்திக்க வைக்கட்டும் ...ஆசிரியர் குழு

கவிஞர் வைரமுத்துவுக்கு தேசிய விருது கிடைத்துள்ளது; இதனை அவராலேயே தாங்கிக் கொள்ள இயலவில்லை. வானுக்கும் பூமிக்குமாகக் குதிக்கிறார். கிலோ கணக்கில் இருந்த தலைக்கனம் டன் கணக்காகிவிட்டது.

ஆறாண்டுகளில் இவரது சினிமா வளர்ச்சி துரிதகதியானது. திறமையை விட சூழ்நிலைகள் இவருக்கு நன்கு அமைந்துவிட்டன. கண்ணதாசன் மறைவு. நா. காமராசன், புலமைப்பித்தன், முத்துலிங்கம் போன்றோர் தனது இரண்டு கால்களில் ஒன்றைக் கலை அரசியலில் ஊன்றிக் கொண்டது, வாலிக்கு தன்னை ஒரு பெரிய இயக்கியவாதியாக பிரகடனப்படுத்திக் கொள்ளத் தெரியாதது, கவிஞர் மு. மேத்தா போன்றோர் திரைத் துறையில் தீவிர வாதியாக இல்லாமை; எல்லாவற்றையும் விட, —

'முன்மொழிய' ஒரு பாரதிராஜா, 'வழிமொழிய' ஒரு இளையராஜா இருந்தது ● தன்னுடைய இமேஜை ஒரு நடிகையைப் போலக் காப்பாற்றி வருகிறார். பத்திரிகைகளில் பலரை பாராட்டி ஆள் சேர்ப்பது. ஒரு துணுக்காவது இதழ்களில் தன்னைப்பற்றி வரவேண்டும் என்பதில் கவனமாயிருப்பது. இன்னொரு கண்ணதாசனாக தன்னை நிரூபிக்க முயல்வது. இவையாவும் இவருக்கே உரிய 'சினிமாதந்திரங்கள்'

● சமீபத்தில் 'பாரதிராஜா, பாலசந்தர் இவர்கள் தான் டைரக்டர்கள், மற்ற அனைவரும் இவர்களைப் பார்த்து சூடு போட்டுக் கொண்டவர்கள்' என்று பேசினாராம். மேலும் தான் மட்டும் தான் கவிஞன் என்கிற ரீதியில் தன் வீட்டுக் கண்ணாடியில் தனது பிம்பத்தையே காதலிப்பது. இவையாவும் தேவை தானா? இந்த சுயமோகம் உங்களை எங்கே அழைத்துச் செல்லும்? →

FREE E - BOOKS , www.thamizham.net.,

# "டிப்ஸ்"

டிப்ஸ் ஹோட்டல்களில் பெருகிவிட்டது. இது ஒருவகையான சர்வர்களுக்குத் தரப்படும் லஞ்சம். பெரிய ஹோட்டல்களில் உள்ள சர்வர்களுக்கு இதன் மூலம் ஆபிஸர் சம்பளம் கிடைத்து விடுகிறது. ஐந்து நட்சத்திர ஹோட்டல் சர்வர்களைப் பற்றி கேட்கவே வேண்டாம்.

இதனால் சர்வர்கள் ஆளைப் பார்த்துப் பரிமாறுகிறார்கள். 'இவர் அதிகமாக தருவார், இவன் குறைவாகக் கொடுப்பான்' என்பதை மனதிற்குள் கணக்குப் போட்டுக் கண்டுபிடித்து விடுகிறார்கள். அதற்குத் தகுந்தாற்போல உபசரிப்பு நடைபெறுகிறது. வழக்கமாக வரும் கஸ்டமர்களை விழுந்து விழுந்து உபசரிக்கிறார்கள்.

70 காசு டீக்கு ரூ ஒன்றை பிளேட்டில் வைக்கிறோம். பாக்கி உள்ள முப்பது காசை ஒரு மரியாதைக்காகத் தர வேண்டியுள்ளது. ஆக டீ விலை ரூபாய் ஒன்றாக நமக்கு உடனே விலையேறுகிறது. அனைவரும் இந்தமாதிரி பழக்கப் படுத்தி விடுவதால் நாம் டிப்ஸ் வைக்காவிட்டால் கூச்சமாகி விடுகிறது. மற்றவர்களும் தவறாக நினைக்கிறார்கள். அது மட்டுமல்ல; பல ஹோட்டல்களில் டிப்ஸ் வைக்காதவர்களை சர்வர்கள் திட்டுகிறார்கள்.

ஒரு சர்வரைப் பார்த்துக் கேட்டேன்: "டிப்ஸை ஒரு பிச்சை மாதிரி நினைத்து விட்டெறிகிறார்களே... இதை ஏன் வாங்குகிறீர்கள்...?"

"சர்வர்களை எவன்சார் மதிக்கிறான்? எங்களுக்கு டிப்ஸ் மூலம் நிறைய பணம் வர்தோ நெனச்சி முதலாளி சம்பளம் கொறச்சித்தர்ரார். அதனால் இதனை வாங்காம இருக்க முடியலை" ஆக, டிப்ஸை முதலாளிகள்தான் போற்றி, நீருற்றி வளர்க்கிறார்கள்.

—பார்வையாளன்

ஞாபக மறதி அதிகம் உள்ள இந்தியா சினிமா மிகப்பெரிய ஜாம்பவான்களை எல்லாம் மறந்திருக்கிறது; புறக்கணித்திருக்கிறது. பலர் மௌனமாக இருக்கிறார்கள் என்பதற்காக நீங்கள் போடுகிற கூச்சல்களையெல்லாம் அவர்கள் ஆமோதிக்கிறார்கள் என்ற அர்த்தம் அல்ல.

— ஜெ. சூர்யா

FREE E - BOOKS , www.thamizham.net.,

# மனிதாபிமானமும் மேற்கும்



ஒரு பக்கம் மேற்கில் மனிதாபிமானமிக்க செயல்கள் நடைபெறுவதாக கேள்விப்படுகிறோம். ஆனால் இப்படியும் இன்னொரு பக்கம் நடக்கிறதே:

அளவுக்கு மீறிய பழ உற்பத்தியால் விலை குறைந்து விடுமென அஞ்சி 8,00,000 டன் பழங்களை அழிக்க ஐரோப்பிய பொருளாதார அமைப்பு முடிவு செய்துள்ளது. ஆப்பிரிக்க, ஆசிய, தென்னமரிக்க நாடுகளிலும் நாள்தோறும் பஞ்சத்தால் மக்கள் செத்துக் கொண்டிருக்கும் போது வெறும் லாப நோக்கத்துடன் ஐரோப்பா இப்படி உணவு நாசம் செய்கிறது! இப்படி அழிக்கப்படும் பழங்கள் பசியால் வாடும் ஒரு மில்லியன் மக்களின் ஓராண்டு உணவு தேவையை பூர்த்தி செய்ய முடியும்.

கோதுமையை அமெரிக்கா முன்பு கடலில் கொட்டியது போல இப்போது மேற்கு ஜெர்மனி, பால் உற்பத்தி அதிகமானதால் 2,60,000 பசுக்களைக் கொல்கிறது. பால் விலைச் சரிவைக் காப்பாற்றவே இக்கொலையாம்.

## ஜப்பானில் மேற்கின் பாதிப்பு:

ஜப்பானிய மாணவர்கள் வன்முறை செயல்களிலும், மனம் போன போக்கிலும் ஈடுபடுவது அதிகரிக்கிறது. 2125 கிரிமனல் குற்றங்களை மாணவர்களே செய்திருப்பதாக அந்நாட்டுக் காவல் துறை புள்ளி விவரம் கூறுகிறது. அங்கு 5 ஆண்டுகளுக்கு முன்பு இருந்ததைப் போல இது இருமடங்கு; அது மட்டுமல்ல; பாடம் சொல்லித்தரும் ஆசிரியர்களை அடிப்பதும் உதைப்பதுமான 1140 சம்பவங்கள் நடந்திருக்கின்றன. "எல்லாம் அமெரிக்க மாணவர்களைப் பார்த்து காப்பி அடிப்பதால் வரும் வினை!" என்று இது பற்றி ஜப்பானிய இதழ்கள் எழுதுகின்றன.

## சீனாவிலும் அப்படித்தான்:

கடந்த 1983ஆம் ஆண்டு ஆகஸ்டு மாதத்திலிருந்து இது வரை கொலை, கற்பழிப்பு, ஏமாற்று, கொள்ளை ஆகிய குற்றங்களுக்காக 10,000 பேருக்கு அதிகமாக சீனாவில் மரண தண்டனை நிறைவேற்றப்பட்டுள்ளது. மேற்கத்திய நாடுகளுடன் தொடர்பு கொள்ள அனுமதி வழங்கப்பட்டதைத் தொடர்ந்து சீனாவில் குற்றங்கள் அதிகரித்துள்ளன என்று கூறுகிறார் சீன அதிபர் டெங்ஜியா.

FREE E - BOOKS , www.thamizham.net.,

# பங்காரு அடிகளும் எம். ஜி. ஆரும்

வார்த்தைக்கு வார்த்தை அண்ணா ஆட்சி, பெரியார் பாதை என்று கூக்குரலிடும் தமிழக அரசின் முதல்வர் எம். ஜி. ஆர், அண்ணாவும், பெரியாரும் வெறுத்து ஒதுக்கக் கூடிய செயல்களையே நடைமுறையில் செய்து வருகிறார்.

அண்மையில் பக்தி வணிகத்தில், தீரேந்திர பிரமச்சாரி, சாயிபாபா போன்றோரையும் தூக்கியடிக்கும் வகையில் வளர்ந்து வரும் மருவத்தூர் பங்காரு அடிகளாரின் மாய வலையில் முதல்வர் எம். ஜி. ஆரும் வீழ்ந்துள்ளார். இதுபற்றி 1-6-86 வணிக ஒற்றுமை ஏட்டில் வெளிவந்துள்ள கீழ்கண்ட செய்தி உண்மையானால், அண்ணாவும், பெரியாரும் உயிரோடிருந்தால், தங்கள் பெயரை எம். ஜி. ஆர் பயன்படுத்துவதற்கு உடனடி தடை விதிக்கக்கூடும் :

"தற்போது முதலமைச்சருக்கே அவர்தான் ஆலோசகர், ஜோதிடர் அனைத்தும். அதிலும் அண்மையில் சென்னை கடற்கரையில் சுமார் ரூ 30 லட்சம் செலவில் நடத்தப்பட்ட ஆன்மிக மாநாட்டுக்குப் பிறகு எம்.ஜி.ஆருக்கு பங்காருவும், பங்காருக்கு எம். ஜி. ஆரும் தான் பாதுகாப்பு என்ற உடன்பாடு ஏற்பட்டு விட்டது.

எம். ஜி. ஆருக்கு சமீபத்தில் ஏற்பட்டுள்ள ஒவ்வொரு சிக்கலுக்கும் ஒரு விதாயம் கூறியுள்ளாராம் பங்காரு. அதில் முக்கியமானது—

முதல்வர் குடி இருக்கும் இல்லத்தை உடனடியாக மாற்ற வேண்டும் என்பது. அவருக்கு ஏற்பட்டுள்ள உடல் கோளாறு, ஆட்சி சிக்கல், உட்கட்சி பூசல் அனைத்திற்குமே காரணம் அவரது ராமாவரம் தோட்டம் வீடு ராசி இல்லாமல் போனது தானாம்.

ராமாவரம் தோட்ட வளாகத்தில் ஏகப்பட்ட எலும்புக் கூடுகள் புதைக்கப்பட்டுள்ளதால் மூதேவி தோஷம் மண்டி விட்டதாக பங்காரு கண்டுபிடித்துக் கூறியுள்ளாராம். அதனால் ராமாவரம் குடி இருப்பை உடனடியாக மாற்றும்படி கட்டளை இட்டுள்ளார் அடிகளார்.

அநேகமாக இன்னும் ஓரிரு மாதத்தில் எம். ஜி. ஆர் குடி மாறுகிறார். தி.நகரில் தண்டபாணித் தெருவில் இருக்கும் 9 ஆம் எண் இல்லம் தயாராகிக் கொண்டுள்ளது."

...இக

FREE E - BOOKS , www.thamizham.net.,

# இந்திரா பார்த்தசாரதி பேட்டி

**இன்று பெரும்பாலான தமிழ்ப் படைப்பாளிகள் தங்களது சமூகப் பொறுப்பை உணர்ந்து செயல் படாத நிலை ஏன்?**

“நான் எனக்காக எழுதுகிறேன். எனக்கு சமூகப் பொறுப்பில்லை. சமூகத்திலிருந்து ஒதுங்கியிருப்பது ஆன்மிகம்; மார்க்ஸியம் தான் பிராமணியம், ஆன்மிக லௌகீகம்” என்றெல்லாம் வளர்ந்த பிறகு எழுத்தாளன் பேசித்திரிவது சரியில்லை. எங்கேயிருந்து வந்தோம், எதனால் நமக்கிந்த பாராட்டுக் கிடைத்தது என்று சௌகர்யமாக மறந்து விடுகின்றனர். சமூகப் பொறுப்பில்லை என்றால் எதற்கு எழுத வேண்டும்?

இப்படிப் பேசுவதெல்லாம் சுத்த ஹம்பக். தனக்குச் சமூக பொறுப்பில்லை என்பவர்கள் சமூக விரோதிகள். இங்கு சிறந்த எழுத்தாளர்கள் தங்களைத் தனிப்பட்ட வர்க்கம் என்று நினைத்துக் கொள்கிறார்கள். இன்னும் சிலர் தொழிலாளியைப் பற்றிக் கதை எழுதிவிட்டு இது ஓர் காதல் கதை என்கிறார்கள். இப்படிப் பட்டவர்களைத் தூக்கிலிட வேண்டும். பெரும் பாலான படைப்புகள் Irresponsible ஆகத்தானிருக் கின்றன...

உணர்ச்சி வெளிப்பாட்டின் கருவி தானே இலக்கியம் இன்றைய நிலையில், எழுத்தாளனின் உணர்ச்சி கோபமாய்த் தானிருக்க வேண்டும்; வாசகர்கட்குள்ளும் கோபத்தை உண் டாக்குவதே இலக்கியத்தின் வெற்றியாயிருக்க வேண்டும்.

**இந்தியாவில் கம்யூனிஸ்டு இயக்கம் பற்றி ..**

இந்தியாவின் துளிர்விட ஆரம்பித்த வளமையான கம்யூனிசம் செத்துப் போகக் காரணம் ரஷ்யக் கொள்கைகள் தான் .. ஆம்; ரஷ்யா தனது தேசிய நலனைக் கருதி எப்போதும் இந்தியாவின் ஆளுங்கட்சியையே இடது சாரியாக நினைத்து ஆதரிக்கிறது. இந்திய கம்யூனிஸ்ட்கட்சி இந்தப் போக்கை எதிர்க்கவும் ஆதரிக்கவும் முடியாமல் நம்மக்களிடம் எப்படிக் கூறுவது என்று Embarassing ஆகப் Feel பண்ணி மழுங்கிப் போனது.

(1974 இல் அளித்த ஒரு பேட்டியிலிருந்து—)

FREE E - BOOKS , www.thamizham.net.,

# சிகரெட் குடிக்காதவர்களைக் கொல்லாதீர்!

மதுவை விட, விபச்சாரத்தை விட சிகரெட் கொடியது. காரணம் இவற்றால் சம்மந்தப்பட்டவர் மட்டுமே பாதிக்கப் படுகிறார். ஆனால் சிகரெட் குடிப்பவர்களால், சுற்றி இருக்கிற அப்பாவி மனிதர்களும் பாதிக்கப் படுகிறார்கள்!

சிகரெட் குடிப்பவரின் குடும்பமே பாதிக்கப்படுகிறது! அவரது மனைவி, குழந்தைகள் மட்டுமல்ல, கருவில் இருக்கும் சிசு கூட கடுமையாக பாதிக்கப்படுகிறது!


தனக்குத்தானே பாதாள
குழியும் வெட்டுகிறான்!

தான் உள்ளே இருப்பதை விட அதிகமான புகையை சிகரெட் குடியர் தன்னைச் சுற்றி பரப்புகிறார். அதாவது சிகரெட் குடிக்க விரும்பாதவர்களையும், வலுக்கட்டாயமாகபுகைக்க வைக்கிறார். சுற்றி இருப்பவர்கள் இரண்டாந்தர புகைஞர்கள் ஆகிறார்கள்.

தார், நிகோடின், கார்பன் மோனாக்சைட் என்ற கொடிய பொருட்களைப்புகை உட்செலுத்துகிறது. கார்பன் மோனாக்சைட் இரத்த சிவப்பணுவுக்குப்பிராண வாயு கிடைப்பதையே தடுக்கிறது. இந்த விதத்தில் கஞ்சாவை விட இது கொடியது.

90% புற்றுநோய் சாவுகளுக்கும், 75% மார்பு நோய் இறப்புகளுக்கும், 25% இதய நோய் மரணங்களுக்கும் சந்தேகத்திற்கு இடமின்றி பாழும் சிகரெட்டே காரணம்!

எனவே இந்த வியாதிகள் எல்லாம் சிகரெட் பிடிப்பவர்களுக்கு மட்டுமின்றி, கூட இருப்பவர்களுக்கும் வர வாய்ப்பு உண்டு. தொற்று நோய்க்காரர்களைக் கண்டு அஞ்சுவதை விட, சிகரெட்காரர்களைக்கண்டு தான் நாம் அதிகம் அஞ்ச வேண்டும்.

இவ்வளவு தீமைசெய்யும் சிகரெட்டை, பொதுவிடங்களில் புகைப்பவர்கள் சமூக விரோதிகளே!

—சித்தன்

FREE E - BOOKS , www.thamizham.net.,

[illegible]

# பெற்றோரால்!!

மதுரை மாவட்டம் உசிலம்பட்டியிலும் அதனைச் சுற்றி உள்ள 300 கிராமங்களிலும் 2 லட்சம் கள்ளர் இன மக்கள் வாழ்கின்றனர். கடந்த 10 ஆண்டுகளாக இவ்வகுப்பினர் தமக்குப் பிறக்கும் பெண் குழந்தைகளைக் கொலை செய்து வருவது வெளிச்சத்துக்கு வந்துள்ளது.

பெண் குழந்தை பிறந்த 1 மணி நேரத்திலேயே தாய் தன் குழந்தையுடன் எப்படியாவது மருத்துவமனையிலிருந்து தப்பித்து வீடு வந்து சேருகிறாள். சில மணி நேரங்களில் அவள் கணவன் கொண்டு வரும் நச்சு மூலிகைகளை அரைத்து கண்ணீருடன் தன் சிசுவுக்கு ஊட்டுகின்றாள். பின் கணவனும் மனைவியும் வீட்டுக்கு வெளியே வந்து கதவைத் தாளிட்டுக் கொள்கின்றனர். உள்ளே குழந்தை வலிப்பு கண்டு, துடித்து, மூக்கிலும், வாயிலும் ரத்தம் கக்கி அதன் உயிர்த்துடிப்பு அடங்கும்; பின் வீட்டின் கொல்லைப்புறத்திலேயே குழி தோண்டி அக்குழந்தையை அடக்கம் செய்கிறாள் அந்தத் தாய். குழந்தை பிறக்கும் நேரத்தில் நச்சு மூலிகை கிடைக்காவிட்டால் என்ன செய்வது என்று மனைவி கருவுற்றவுடனேயே தன் வீட்டில் நச்சு மூலிகையை வளர்க்கத் துவங்கும் கணவர்களும் இங்கு உண்டு.



முதலாவதாகப் பிறக்கும் பெண் குழந்தை பெரும்பாலும் கொல்லப்படுவதில்லை. இரண்டாவது மூன்றாவது என்று பையன் பிறக்கும் வரை தப்பிப் பிறக்கும் பெண் குழந்தைகள் தான் இப்படி கொல்லப்படுகின்றன. இப்படிக் கொலை செய்யாத குடும்பங்கள் இங்கு அனேகமாக இல்லவே இல்லை.

FREE E - BOOKS , www.thamizham.net.,

பெண் குழந்தையை ஈன்றெடுக்கும் மனைவியைக் கணவன் திரும்பி கூடப் பார்ப்பதில்லை. அக்குழந்தையை அவள் கொல்லாவிடில் கணவன் வீட்டை விட்டே விரட்டப்படுகிறாள். இதற்கு அஞ்சியே இத்தாய்மார்கள். கண்ணில் நீருடன் இக்கொடுமைக்குத் துணிகிறார்கள்.

விவசாயக் கூலிகளான இம்மக்களுக்கு வேலை எப்போதும் கிடைப்பதில்லை. அப்படியே கிடைத்தாலும் ஆணுக்கு ரு13 பெண்ணுக்கு ரு 6 என்று சொற்ப கூலியே கிடைக்கிறது. இக்குறைந்த வருவாயில் பெண் குழந்தைகளை எப்படியோ வளர்த்து விட்டாலும் திருமணத்தின் போது வரதட்சணை அரக்கனை எப்படி எதிர் நோக்குவது என்பதே இவர்களது தலையாய பிரச்சனை. ஏனெனில் நிலையான வேலையற்ற அன்றாடங்காய்ச்சி மாப்பிள்ளைக்கே வரதட்சணையாக ரு 2000ம் 5 பவுன் நகைகளும் தர வேண்டும். சொற்பமாகத் திருமணம் செய்ய ஆகும் குறைந்த பட்ச செலவு ரு 30,000. ஒரு பெண் குழந்தையைக் கொன்றால் அடுத்துப் பிறப்பது ஆண் குழந்தையாக இருக்கும் என்ற மூட நம்பிக்கை வேறு. இந்தப் பின்னணியில் ஆண் குழந்தையே வரவு. பெண் குழந்தை செலவு என்று இவ்வினம் கணக்குப் போட்டதில் ஒரு வருடத்தில் அரசாங்க மருத்துவமனைகளில் மட்டும் பிறக்கும் 600 [illegible] குழந்தைகளில் 450 குழந்தைகள் நிச்சயமாக கொல்லப்படுகின்றன.

நமது 'மாண்புமிகு' சுகாதார அமைச்சர் எச். வி. ஹண்டே கூறுகிறார்: "இதுவரை இதுபற்றி திட்டவட்டமான புகார்கள் எதுவும் அரசுக்கு வரவில்லை." தற்போது தகவல் அறிந்ததும் ஒரு மருத்துவர் குழுவை ஏற்படுத்தி அரசாங்க மருத்துவமனைகளில் பிரசவித்துவிட்டு குழந்தைகளுடன் ஏன் அந்தத் தாய்மார்கள் ஓடிவிட்டார்கள் என்று விசாரணை நடத்தச் சொல்லி இருக்கிறாராம்!

20 வருடங்களாக ஒரு பெண்மணி ஆண்ட நாட்டில், 'தாய்க்குலம்' என்று சொல்லியே ஓட்டு வேட்டையாடி ஆட்சிப் பீடம் ஏறிய இன்றைய முதல்வரின் ஆட்சியில் நாம் பாட்டுப் பாடுவோம் சத்தமாக "மங்கையராக பிறப்பதற்கே இங்கே மாதவம் செய்திட வேண்டுமம்மா!"

—இலா

ஆதாரம்: "இந்தியா டுடே"

FREE E - BOOKS , www.thamizham.net.,

# வேலைக்காரர் கிராமம்

கம்பரிகம்! ஆந்திராவின் ஸ்ரீகாகுளம் மாவட்டத்தில் உள்ளது இந்தக் குட்டி கிராமம். கம்பரிகம் என்றாலே வேலைக்காரர்களின் கிராமம் என்று பொருளாகும்.

இந்த கிராமத்தில் உள்ள உழைப்பாளர்கள் அனைவரும் நிலச்சுவான்களின் வீட்டு வேலைக்காரர்கள் மாதிரியே உள்ளனர். எந்த மாதிரி உற்பத்தியிலும் நிலச்சுவானுக்கு பங்கு தர வேண்டும். அதாவது இடையர்களின் ஆடு, கால்வாயில் மீனவர்கள் பிடிக்கும் மீன்கள், ஏன் தன் வீட்டுக் கொல்லையில் விவசாயி பயிரிடும் காய்கறிகள் இவற்றில் கூட பங்கு தர வேண்டும். தராவிடில் சாட்டையடியும் அபராதக் கட்டணமும் தண்டனையாகும்.

சென்னை செயின்ட் ஜார்ஜ் கோட்டையின் கவர்னர் லார்டு வில்லியம் பென்டிங் 1604இல் இங்குள்ள நிலப்பிரபுகளுக்கு வழங்கிய இந்த நிரந்தர சொத்துரிமை உடன்படிக்கை இன்னும் பல வழக்கு மன்ற தலையீடுகளையும், அரசு ஆணைகளையும் சவால் விட்டுக் கொண்டு, சௌகர்யமாய் இங்கு உழைக்கும் வர்க்கத்தைச் சேர்ந்த 100 குடும்பங்களை ஆட்டிப் படைத்துக் கொண்டிருக்கிறது.

இந்த நிலப்பிரபுக்கள் நிலவரியோ, நீர் வரியோ அரசுக்கு செலுத்துவதில்லை; ஆனால் அதிகாரிகளைக் கையில் போட்டு கொண்டு ஏழை உழைப்பாளிகளிடமிருந்து ராஜபாகம் எனப்படும் தீர்வை மட்டும் வசூலித்துக் கொண்டிருக்கிறார்கள், இதைத் தவிர குத்தகைக்கு உழைக்கும் விவசாயிகள் அரசுக்கு தனியாக நில, நீர் வரி செலுத்திக் கொண்டிருக்கிறார்கள்.

சென்ற ஆண்டு ஜூலையில் இக்கிராம விவசாயிகள் பக்கத்து கிராமத்தினரையும் சேர்த்துக் கொண்டு, நிலச்சுவான்களுக்கு ஆதரவான நீதி மன்ற ஆணைகளை மீறி இந்திய கம்யூனிஸ்டு கட்சி தலைமையில் போராட்டத்தில் இறங்கினர். இப்போராட்டத்திற்கு தலைமை தாங்கிச் சென்ற பாடி நாராயணா என்ற பள்ளியாசிரியர் மிருகத்தனமாக தாக்கப் பட்டு கொலை செய்யப்பட்டார்.

கிராம மக்கள் எழுச்சியையும் மீறி இந்த அநீதி, சட்டம், நீதிமன்றம், அதிகாரிகள் இவர்கள் ஆதரவுடன் இன்னும் தொடர்ந்து தான் வருகிறது.

...ஸ்டெனிஸ்லாஸ்

FREE E - BOOKS , www.thamizham.net.,

# இந்தி பிரச்சார சபா தலைவர் ஜெயகாந்தன்



ஜெயகாந்தன்! தமிழ்ப் பல்கலைக் கழக பரிசு ரூபாய் ஒரு லட்சத்து ஒன்றையும் செலவு செய்துவிட்டீர்களா? அடுத்த இலக்கு என்ன? ஞானபீட பரிசுதானே? அதனையும் பெற வாழ்த்துக்கள்.

இப்போதெல்லாம் எல்லா கூட்டங்களிலும் நீங்கள் பேசுகிறீர்கள். மாரியம்மன் விழாவாக இருந்தாலும், காங்கிரஸ் கூட்டமானாலும், கம்யூனிஸ்ட் மேடையானாலும் தோன்றி விடுகிறீர்கள்.

காந்தி தேசப்பிதா. நேரு உங்கள் ஆசான். இந்திரா நல்ல தலைவி. மார்க்ஸ் மாபெரும் மருத்துவர். கூறுகிறீர்கள்.

அது சரி, நீங்கள் யார்? கொஞ்ச நாள் முன்பு கருணாநிதி நல்ல தலைவன் என்று கண்டுபிடித்தீர்கள். இப்போது திராவிட இயக்கத்தினர்களை ஒட்டு மொத்தமாகப் 'பொறுக்கிகள்' என்று விளாசுகிறீர்கள். தற்போது மொழிப் பிரச்சனையில் புகுந்து உங்களையும் குழப்பி மற்றவர்களையும் குழப்பி வருகிறீர்கள்.

'தமிழக மக்கள் ஏற்றுக் கொள்கிற வரை இந்தி திணிக்கப் படமாட்டாது என்று நேரு உறுதிமொழி வழங்கினார். நாங்கள் இப்போது ஏற்றுக் கொள்கிறோம். இந்தியைக் கட்டாயப் பாடமாக்குங்கள்' என்று பேசுகிறீர். மத்திய அரசை விடவும் நீங்கள் இந்தியை தீவிரமாக திணிக்கிறீர்களோ?


'ஜெயகாந்தன் தமிழில் எழுதியிருக்கிறான் என்பது தமிழுக்குப் பெருமை. தமிழால் எனக்குப் பெருமையில்லை. இந்தியில் நான் எழுத்தாளனாக இருந்தால் இன்னும் மகிழ்ச்சியடைந்திருப்பேன். இன்னும் நிறைய பேரை அடைந்திருப்பேன்'

ஜெயகாந்தன். இந்தி பிரச்சார சபாவுக்குத் தலைவர் ஆக முயன்று வருகிறீர்களா?

—கா. தென்னிலவன்

FREE E - BOOKS , www.thamizham.net.,

# சூரியன் இருக்கும் வரை மின் பஞ்சம் ஏன் ?



FREE E - BOOKS , www.thamizham.net.,

ஆண்டுதோறும் மின்வெட்டு என்று கையாலாகா அரசுகள் பெட்டை புலம்பல் புலம்புகின்றன. ஆண்டுக்கு 22,496 மெ.யூனிட் தமிழகத்தின் தேவை; ஆனால் உற்பத்தி செய்ய 13,731 மெ.யூனிட்டுக்கு மேல் வக்கில்லை.

மழை சரியில்லை, மத்திய அரசு கைவிரித்து விட்டது போன்ற வழக்கமான நொண்டி சமாதானங்கள் சொல்வதை விட்டு விட்டு வேறு முறையில் மின்சாரப் பற்றாக் குறையைப் பூர்த்தி செய்வது பற்றி ஏன் சிந்திக்கக் கூடாது?

படத்தைப் பாருங்கள். சூரிய ஒளியிலிருந்து மின்சாரத்தை, பாட்டரிகளில் தேக்குகிறார்கள். சுநீர் போடும் கருவியை இயக்குகிறார்கள், தெரு விளக்குகளை எரிய வைக்கிறார்கள்; அமெரிக்காவில் அல்ல; நமது இந்திய கிராமம் ஒன்றில் தான் இம்முயற்சி நடக்கிறது. டில்லிக்கு அருகில் உள்ள கன்கண்ஹேரி என்ற கிராமத்தில் இயற்கை சக்திகளை கொண்டே தேவைகளைப் பூர்த்தி செய்கிறார்கள். இங்கு ராட்சச காற்றாடி நீரிறைக்கிறது; சாண வாயுவும் சூரிய அடுப்பும் சமையல் எரிபொருள் செலவைக் குறைக்கின்றன.

கன்கண்ஹேரி சூரிய மின் பரிசோதனைத் திட்டம் வெற்றி பெற்றால் இவ்வாண்டு இறுதியில் சூரிய மின் கலத்தில் இயங்கும் 100 பேருந்துகள் டில்லி தலைநகரில் வலம் வந்து பெட்ரோலையும் மிச்சப்படுத்தும்.



FREE E - BOOKS , www.thamizham.net ,

# மெரீனா முதல் குமரி வரை மீனவர்கள் 5

## மீனவர்களின் சமயம்

'உழைக்கும் மக்கள் எல்லோரும் ஒரே மதம்' என்னும் உணர்வு இன்னும் பேச்சளவில்தான் இருக்கிறது. மதப்பாகுபாடுகளும், மதக் கலவரங்களும் தொடர் கதையாகவே உள்ளன. 'மதம் ஒரு அபின்' என்று மேடையில் பேசிவிட்டு, தமக்குள் மதவெறியைப் பாதுகாக்கும் மனிதர்களும் இங்குண்டு.

மீனவர்களிடையேயும் மதப் பாகுபாடுகள் உள்ளன. மீனவர்களில் பலர் இந்துக்களாகவே உள்ளனர்– சென்னை, கீழ்த் தஞ்சைப் பகுதிகளில். ஆனால், தெற்கே செல்லச் செல்ல, கிறித்துவ மீனவர்களே அதிகம்.

கன்னியாகுமரி, தூத்துக்குடிப் பகுதிகளில், வேறு மதத்தைச் சார்ந்த ஒரு மீனவக் குடும்பம் கூட இல்லையென்றும், அனைவரும் கிறித்தவர்களே என்றும் கூறுகின்றனர். ஆனால், அப்படிச் சொல்லிவிட முடியாது; தெற்குக் கடற்கரையோர மீனவர்களில் 90 சதவீதத்திற்கும் மேற்பட்டோர் கிறித்துவர்கள் என்பதே உண்மை.

இதனால்தான், குமரிமாவட்டத்தில் அடிக்கடி நடைபெறும் மதக்கலவரங்களில் மீனவர்களின் பெயரும் அடிபடுகிறது.

மதத்தின் பெயரால், உழைக்கும் மக்களைக் கூறுபோடுவது ஆளும் வர்க்கத்தின் அடிப்படைத் தந்திரம். சென்னையில் கூட மீனவர்களைப் போலீஸ் சுட்டபோது, ஒரு இந்துமத இயக்கம், "தேவராம் என்கிற கிறிஸ்துவர் இந்துக்களைச் சுட்டு விட்டதாக" சுவரொட்டிகளை ஒட்டியது. உழைக்கும் வர்க்கத்தை ஆளும் வர்க்கம் சுட்டது என்கிற உண்மையைத் திரித்தும், கொச்சைப்படுத்தியும் கூறிய அதே இயக்கத்தினர் குமரி மாவட்டத்தில், அதே மீனவர்களோடு, அவர்கள் கிறித்துவர்கள் என்பதால், அடிதடியில் ஈடுபட்டது அனைவருக்கும் தெரியும்.

மீனவர்கள் எந்த சமயத்தைச் சார்ந்திருக்கின்றனர் என்பதைக் காட்டிலும், அவர்களுக்குள் ஏற்பட்ட மதப்பாகுபாட்டின் சரித்திரப் பின் புலத்தை அறிந்து கொள்ள வேண்டியது அவசியம்.

FREE E - BOOKS , www.thamizham.net.,

தெற்கே மட்டும் பெரும்பாலான மீனவர்கள் ஏன் கிறித்துவ மதத்தைத் தழுவினர் என்கிற உண்மையை, பேராசிரியர் முத்து குணசேகரன், தன் ஆய்வேட்டில் விரிவாகக் கூறுகின்றார்.

கி.பி. 1530க்குப் பிறகுதான் இந்த மதமாற்றம் நடைபெற்றிருக்கிறது. அதற்கு முன்னால் அனைவரும் இந்துக்களே. விசுவநாத நாயக்கன் ஆட்சிக் காலத்தில், பாண்டிய நாட்டைப் பல சிற்றரசர்கள் ஆண்டனர். தென்காசிப் பாண்டியனை, கேரள மன்னன் உதயமார்த்தாண்ட வர்மா படையெடுத்து வென்றான். இந்த மன்னர்களின் ஆதரவைப் பெற்று, குதிரை விற்றுக் கொண்டிருந்த அரபு நாட்டு முகமதியர்கள் தென் கரையோரப் பகுதிகளில் முத்துக்குளிக்கும் உரிமையைப் பெற்றுவிட்டனர். கீழக்கரை, தொண்டி, காயல்பட்டினம் ஆகிய பகுதிகளிலும் முகமதியர்களின் செல்வாக்கு கூடியது. அவர்களிடம் கூலி பெற்றுக் கொண்டு, முத்துக்குளித்த மீனவர்களால், முகமதியர்களிடம் செல்வம் குவிந்தது.

ஒரு நாள் மீனவப் பெண் ஒருத்தியை, ஒரு முகமதியன் கெடுக்க முயற்சிக்க, முகமதியர்களுக்கும், மீனவர்களுக்கும் இடையே கலவரம் மூண்டது. முதலில் மீனவர்களின் கையே ஓங்கியிருந்தது. பணபலம் மிக்க முகமதியர்கள் கொஞ்சம் கொஞ்சமாய் மீனவர்களை முறியடித்துவிட்டனர். மீனவர்களின் தலைக்கு இவ்வளவு பணம் என்று அறிவிக்கப்பட்டு, தலைகள் குவிந்தன என்று "மேரி கோவிலின் வரலாறு" என்ற நூல் கூறுகிறது.

புதிதாக வந்து கொண்டிருந்த போர்ச்சுகீசியர்களிடம், மீனவர்கள் பிறகு சரணடைந்தனர். முகமதியர்களிடமிருந்து, மீனவர்களைக் காப்பாற்ற முனைந்த போர்ச்சுகீசியர்களுக்கும், முகமதியர்களுக்குமிடையே ஒரு போரே நடந்தது. அல்போன்ஸ்-டி-மெல்லோன் என்ற போர்த்துகீசியத் தளபதி, முகமதியர்களின் ஆதிக்கத்தை அடக்கினான்.

மேலும் ஜான்-டி-குருஸ், 1542-இல் தூத்துக்குடிக்கு வந்த செயிண்ட் சேவியர் அகியோரின் தொடர்பால் கிறித்துவ மதத்தின் மீது பற்றுதல் ஏற்பட்டு, ஏறத்தாழ 20 ஆயிரம் பேர் மதம் மாறினர்.

முகமதியர்களின் கூலிகளாக முத்துக் குளித்த பரதவர்கள், பிறகு போர்ச்சுகீசியர்களின் கூலிகளாக முத்துக்குளிக்கத் தொடங்கினர். [தொடரும்]

—சுப. வீரபாண்டியன்

FREE E - BOOKS , www.thamizham.net.,

# பேபி பவுடரை உபயோகிக்காதீர்!

"வியர்க்குருவிலிருந்து குழந்தைகள் சருமத்தைக் காக்கிறது எங்கள் பேபி பவுடர்! நாள் முழுவதும் குளிரூட்டுகிறது எங்கள் பேபி பவுடர்" என்று அப்பட்டமான பொய் விளம்பரங்கள் தருகிறார்கள்.

பேபி பவுடராவது, குளிரூட்டுவதாவது! விளம்பர வாசகங்களுக்குத்தான் கட்டுப்பாடே இல்லையே.

பேபி பவுடர் குழந்தைகளுக்கு எவ்வித பயனும் அளிப்பதில்லை என்பதோடு, மூச்சுக் கோளாறு சம்மந்தப்பட்ட நியுமோனியா முதலிய பல கொடும் வியாதிகளுக்கும் வழி வகுக்கின்றது என்ற உண்மையை நியூயார்க்கில்உள்ள குழந்தை மருத்துவப்பிரிவு நடத்திய அண்மைய ஆராய்ச்சி நிரூபித்து உள்ளது.

இப்பவுடரில் அடங்கியுள்ள ஜிங்க் ஆக்சைட், போரிக் அமிலம், கால்சியம் அண்டி சிலினேட் போன்றவை நச்சுத் தன்மையுடையவை. குழந்தைகளுக்கு அபாயமுடையவை. இதில் உள்ள ஜிங்க் ஸ்டீரெட்ஸ் மூக்குடன் உட்செல்வதன் விளைவாக இரத்தத்தில் பிராண வாயுவின்மை, நிமோனியா முதலிய பல அபாயகரமான நோய்களுக்கு வழி வகுக்கிறது

மேனாடுகளில் எந்த டாக்டரும் பேபி பவுடரை குழந்தைகளுக்குச் சிபாரிசு செய்வதில்லை. ஆனால் நமது தனியார் மகப்பேறு மருத்துவமனைகளில், குழந்தைபேறு முடித்து வீடு திரும்பும் போது பேபி பவுடரையும் கொடுத்து விட்டு அதற்கு உரிய தொகையைக் கொள்ளை லாபத்துடன் மருத்துவ பில்லில் சேர்க்கிறார்கள். இவை பவுடர் கம்பெனியாளர்களால் குறைந்த விலையிலோ அல்லது விளம்பரத்திற்காக இனாமாகவோ கொடுக்கப்பட்டவை.

குழந்தைகளுக்கு எவ்வித பவுடரும் தேவை இல்லை. செயற்கை வழுவழுப்பு அவசியமெனக் கருதினால் மளிகைக் கடைகளில் கிடைக்கும் தானிய மாவு (corn starsh) பயன் படுத்தலாம். இது மிகவும் மலிவானது மட்டுமின்றி அபாயம் குறைந்தது கூட.

நன்றி: மங்கை : என். பி. பானுமதி

FREE E - BOOKS , www.thamizham.net.,

# பிணங்கள் ஜாக்கிரதை!

இருவரும் வேட்டியை சாலையில் விரித்தார்கள். அந்தப் பிணத்தை அதன்மேல் கிடத்தினார்கள். ஒரு மேற்துண்டால் பிணத்தைப் போர்த்தினார்கள். தலைமாட்டில் ஊதுவர்த்தி கொளுத்தப்பட்டது. மாலை சூட்டப்பட்டது.

'அனாதைப் பிணம் உதவி செய்யுங்கள்'

சாக்பீஸில் ஒருவன் எழுதினான். இருவரும் ஒரு பெஞ்சைப் போட்டு அதைப் பகிர்ந்து அமர்ந்து கொண்டார்கள்.

போலீஸ் காரர் வந்தார். மேல் மட்டப் பேச்சுவார்த்தைகள் நடந்தன. ஒரு கமிஷன் அடிப்படையில் மாலை வருவதாகப் போலீஸ் அறிவித்தார். வரவர கூட்டம் அதிகரித்தது. இறந்தவனுக்காக கவலைப்பட்டார்கள். அதற்கு அஞ்சலியாக பணத்தையும் காசையும் விட்டெறிந்தார்கள். M.L.A. கார் வந்தது. நின்றது.

சிறுகதை



"என்னப்பா, யார் செத்தது" அடுத்தத் தேர்தலுக்கான அக்கறையோடு விசாரித்தார்.

"என் மைத்துனருங்க. நாங்க உங்க கட்சிக்காரங்க."

"கவர்மெண்ட் இருபத்தைந்து ரூபா தருதே, வாங்கலாமேப்பா—பொனத்த புதைக்க."

"அப்ளிகேஷன் போட்டிருக்கோம் ஒரு வாரத்துல கெடச்சுடும்னு சொன்னாங்க."

இரவு பிணத்தை வைத்து சம்பாதித்தவர்கள் சாராயக்கடையில் கொண்டாடிக் கொண்டிருக்கிறார்கள். அப்போது—

சென்னைப் பொது மருத்துவமனையில் போஸ்ட் மார்டத்துக்காக வைக்கப்பட்டிருந்த பிணத்தைக் காணவில்லை. தேடிக் கொண்டிருக்கிறார்கள்.

...நா. தென்னிலவன்

FREE E - BOOKS , www.thamizham.net.,

# ஏஜெண்டுகள் தேவை

## சூப்பர் சூரியா

### மூலிகைத் தைலம்

குழந்தைகளும் பெரியவர்களும்
உபயோகிக்கலாம்

-ooOoo-

- சரும நோய்
- முடி உதிர்வு
- பொடுகு, இளநரை
அகற்றி கூந்தல்
வளர்ச்சிக்கு
உகந்த
நறுமணம் கமழும்
டானிக் - தைலம்



தயாரிப்பாளர்:

STATE INDUSTRIAL PRODUCT

விபரங்களுக்கு:

INDIAN MARKETING CENTRE,
MELAVARI STREET, MANACHANALLUR-621005.

ADVT.


FREE E - BOOKS , www.thamizham.net.,

# வாசகர் எதிரொலி

○ நடுப்பக்கத்தில் புதிய கல்வி முறை குறித்து ஒரு சிந்தனை ஏற்படுத்தினாலும், படிக்கின்ற, படித்து வேலை தேடும் மாணவர்களுக்கென்று ஒன்றும் கூறாது, சிந்தனையைத் தூண்டும் கருத்துக்களை கையில் வைத்துக் கொண்டு ஒன்றும் பேசாது வந்துள்ள சுட்டியின் மீது எனக்கு வருத்தம் கலந்த கோபமே ஏற்படுகிறது.

— A. பழனிச்சாமி, போத்தனூர்.

○ சுந்தர ராமசாமியின் பதிலை, தமிழாசிரியர்களும், வாசகர்களும் பின்பற்றினால் 'மசாலா பத்திரிகைகள்' குப்பைத்தொட்டியில் சங்கமமாவது நிச்சயம்.

— ஆர். பிரேம்குமார், குலசேகரம்.

○ பள்ளிகளில் நடைபெறும் "நோட்டுப் புத்தகக் கொள்ளை" பற்றி 'மேலிடத்தில்' தட்டிக் கேட்க மாட்டார்களா? ஒருவேளை, அவர்களுக்கும் அந்தக் கொள்ளையில் 'ஷேர்' உண்டோ? சம்திங் ராங்!

— த. இளங்கோ, நந்தியநல்லூர்.

○ சென்ற இதழில் நீங்கள் கூறிய புதிய தர்மம் கட்டாயமாகக் கடை பிடிக்கப்பட்டால் – நாம் நன்மை அடைவதோடு, மற்றவரின் மதிப்புக்கும் ஆளாகிவோம் என்பது நிஜம்.

— காழி. க. அருள்மொழி, நந்தியநல்லூர்.

○ 'சூப்பர் ஷு' பற்றி படித்து முடித்ததும் குமட்டல்தான் வந்தது. காரணம், நம் ஊர் கட்டணக் கழிப்பிடங்களின் நினைப்பு.

— எம். பஷீர், ஹைதராபாத்.

○ இன்றைய இளைஞனின் அவல நிலையைச் சுட்டும் கார்ட்டூன் கண்டேன். இதயம் கனத்து இமைகளின் ஓரத்தை ஈரம் நனைத்தது.

— பி.எல். பரமசிவம், மதுரை-1.

○ சுட்டி ஜீன் இதழ் வெளிநாட்டு மாணவர்களின் சிறப்பிதழா? அவர்களைப் பற்றி ஏராளமான செய்திகள் இருந்தனவே!

— ஆர். வசந்தகுமார், கும்பகோணம்.

FREE E - BOOKS , www.thamizham.net.,

# ஷாக் அடிக்கும் ஓட்டல்கள்

சட்டம் அனுமதிக்கும் பகற்கொள்ளைகளில ஓட்டல் நடத்துவதும் ஒன்றாகி விட்டது.

சாதாரண ஓட்டல்களில் உணவுப் பொருள்களின் விலைப் பட்டியல் சுவரில் இருக்கும்; சில பெரிய ஓட்டல்களில் "மெனு கார்டு" என்ற விலைப் பட்டியலை நீட்டுவார்கள்.

இப்படி விலையைத் தெரிவித்து விட்டால் நடுத்தர வர்க்கத்தினர் பலர் எச்சரிக்கையாகி நிறைய சாப்பிட பயப்படுகிறார்கள் என்று சில ஓட்டல்கள் விலையைப் பற்றியே மூச்சு விடுவதேயில்லை.

உணவுப் பொருளை வரவழைக்கும் முன் விலை கேட்பது அநாகரிகம் என்ற போலி நாகரிகத்தில் நம்மவர்கள் மூழ்கியிருக்கிறார்கள். இவர்களின் இந்த கூச்சத்தைச் சாதகமாக்கிக் கொண்டு ஓட்டல்காரர்கள் பரிமாறுபவர்களுக்கு நல்ல கமிஷன் கொடுத்து பல "ஐட்டங்களை"த் தலையில் கட்டுகிறார்கள்.



கடைசியில் பில் வரும்போது மின் அதிர்ச்சி ஏற்படும்! கேவலம் காபி ரூ 4/- என்றிருக்கும்! பழக்காரனிடமும், காய்கறிக்காரனிடமும் அடித்து பேரம் பேசுபவர்கள், இந்த அநியாய விலையைப் பார்த்து, திருடனுக்குத் தேள் கொட்டினாற் போல ஒன்றும் பேச முடியாமல் பர்சில் இருப்பதையெல்லாம் கொட்டி கொடுத்து விட்டு, பரிமாறுபவருக்கும், தங்கள் நாகரிகத்தைக் காப்பாற்றிக் கொள்ள ரூபாய் கணக்கில் "டிப்ஸ்" வைத்து விட்டுத் திரும்புவார்கள்.

தனியார் ஓட்டல்களில் தான் இந்த தந்திர பகற்கொள்ளை என்றால், மத்திய அரசு நடத்தும் ITDC சுற்றுலாத்துறை ஓட்டல்களிலும் இந்த ஏமாற்று வித்தையைப் பிரயோகிக்கிறார்கள். ITDC சுற்றுலா பஸ்களில் பயணம் செய்வோர், வலுக்கட்டாயமாக இந்த ITDC ஓட்டல்களுக்கு அழைத்துச் செல்லப்பட்டு விழி பிதுங்கி வெளியேறும் கோலத்தைத் தினமும் மாமல்லபுரத்தில் பார்க்கலாம்.

—எழில்

FREE E - BOOKS , www.thamizham.net.,



ஷாக் அடிக்கும் நாகரீக ஓட்டல்களை விட நேர்மையான இந்த மலிவு விலை மரத்தடி 'மெஸ்'கள் எவ்வளவோ மேல்!

FREE E - BOOKS , www.thamizham.net.,

**தேசிய இன விடுதலையும் சிறுபான்மையாளர் உரிமையும் :** (2-00) இரணியன் வெளியீடு :- ஈழத்தேசிய விடுதலை முன்னணி ஆதரவாளர்கள், கோவை மாவட்டம் விற்பனை :- M/s யாழ் பதிப்பகம், 386, காமராசர் பாதை, உப்பிலிபாளையம், கோவை-641 015.

**'மே இதழ்' :** மே தின நூற்றாண்டு விழா வெளியீடு, முகவரி :- தொகுப்பாசிரியர், 'மே இதழ்', ப. வடுகபாளையம் (அஞ்), பல்லடம் வட்டம், கோவை மாவட்டம்.

**தீபம் கட்டுரைகள் :** (14-00) நா. பார்த்தசாரதி M s கலைஞன் பதிப்பகம், 10, ஹென்ஸ்மென் ரோடு, தி.நகர், சென்னை 600 017.

**கை விளக்கு வெள்ளி விழா சிறப்பு மலர் :** (5-00) ஆசிரியர் பூதை. செ. அண்ணாமலை, பூதப்பாண்டி, குமரி மாவட்டம்.

**பாரம் சுமப்பவர்கள் :** கவிதைத் தொகுப்பு (3-00) அபிமானி. தொடர்பு முகவரி : இ. குமுதா, 133, சுப்பையா முதலியார்புரம், 4வது தெரு, தூத்துக்குடி.

**விசித்திர டால்பின் :** (3-00) டி. எம். சௌந்திரராசன் M s மயிலவன் பதிப்பகம், 17, கங்கையம்மன் கோவில்தெரு, வடபழனி, சென்னை-600 026.


**மெல்லுடலிகளின் வளர்ப்பு :** (18-00 டாக்டர் வி. சுந்தரராஜ், டாக்டர் சாமுவேல் பால்ராஜ், M/s ஸ்டார் பிரசுரம், 72 பெரிய தெரு, திருவல்லிக்கேணி, சென்னை-5-

**மனிதகுல வரலாறு :** (13-00) எஸ். சங்கரன், M/s பூங்கொடி பதிப்பகம், 14, சித்திரைக்குளம் மேற்கு வீதி, மயிலாப்பூர், சென்னை-600 004.

**சுதந்திர வீரன் சுபாஷ் சந்திரபோஸ் வாழ்க்கை வரலாறு :** (9-75) வி. எம். சாம்பசிவன் M s ஐந்திணை பதிப்பகம், 282, பைகிராப்ட்ஸ் சாலை, திருவல்லிக்கேணி, சென்னை-600 005.



# எமக்கு வந்தவை



FREE E - BOOKS , www.thamizham.net.,

# விட்டமின் A புதுத்தகவல்

ஆண்டுக்கு 5 லட்சம் குழந்தைகள் உலகெங்கும் விட்டமின் எ பற்றாக் குறையால் பார்வை இழக்கின்றன. சுமார் 70 லட்சம் குழந்தைகள் எளிதில் நோய் வாய்ப்படுகின்றன.

உலக சுகாதார சங்கம் (WHO) 5 மில்லியன் டாலர் மட்டுமே செலவிட்டால், இந்த அவலத்தை மாற்ற முடியும்! செய்யுமா?

பெரிய வேடிக்கை என்னவென்றால் விட்டமின் எ பற்றாக் குறை உள்ள வெப்ப நாடுகளில் தான் விட்டமின் எ அபரிமிதமாக இயற்கையில் கிடைக்கிறது.

புற்றுநோய் ஏற்படுவதற்கு விட்டமின் எ பற்றாக்குறையும் காரணம் என்று அண்மையில் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

**விட்டமின் A குறைவால் வரும் நோய்கள் :** இரவு பார்வை மந்தம், தோல் வறட்சி, எளிதாக சலி பிடித்தல், எலும்பு வளர்ச்சியின்மை, இனவிருத்தி உறுப்பு பிரச்சனைகள்.

**விட்டமின் A உள்ளவை :** பால், முட்டை மஞ்சட்கரு, வெண்ணெய், மாம்பழம், பப்பாளிப்பழம், பேரிக்காய், பலாப் பழம், ஆரஞ்சு, தக்காளிப்பழம், பச்சை காரட், மிக அதிகம் : காட் லிவர் ஆயில் (1000 I. U/கிராம்)

**தினசரி தேவை :** ½ வயதுக்குள்: 1400 I.U (International Unit)

1 வயது : 2000 I.U, 1-3 : 2000, 4-6: 2500, 7-10 : 3000

ஆண்கள் 11 முதல்;5000; பெண்கள் 11 முதல்:4000

கர்ப்பமுற்ற பெண்கள்:5000; பால் தரும் மகளிர்:6000

[அடுத்து : பொட்டாசியம் புதுத்தகவல்]

...சித்தன்

தமிழகமெங்கும் வீடுகள், வீட்டு மனைகள் வாங்க - விற்க தொடர்பு கொள்க: எம். வெங்கட், 24, திருவள்ளுவர் தெரு, இராமாபுரம், அம்பத்தூர், சென்னை-600 053.
ADVT.

FREE E - BOOKS , www.thamizham.net.,

## கேள்வி: சுட்டி

**இன்றைய சினிமா கலாச்சாரத்தின் தாக்கம் பற்றியும் அதற்கு என்ன மாற்று என்றும் தெரிவியுங்கள்.**

## பதில்: சுந்தர ராமசாமி

இன்றைய தமிழ் சினிமா மிக மோசமாக மக்களைப் பாதித்துக் கொண்டிருக்கிறது. பார்வைக் கலை என்பதால் சீரழிந்த பத்திரிகை எழுத்துக்களிலிருந்து தப்பித்துக் கொள்ளும் பாமரர்களையும் ஊடுருவிச் சீரழிக்கிறது தமிழ் சினிமா. நம் அனுபவ உலகத்துக்கு அப்பாலும் நம்மை அழைத்துச் சென்று வாழ்வின் விரிவையும் வீச்சையும் நமக்கு உணர்த்தும் சக்தியே கலை ஆகும். தமிழ் சினிமாவோ வாழ்க்கையைச் சித்தரிப்பது போன்ற பாவனையில் பார்வையாளரின் ரகசிய கனவுகளுக்கும், பகற்கனவுகளுக்கும், காம உணர்வுகளுக்கும் தீனிபோடும் போதை பொருளாகத் திகழ்கிறது.

தமிழ் சினிமா துறையில், பணம் முதலீடு செய்பவர்களிலிருந்து அதன் தயாரிப்பில் ஈடுபட்டிருப்பவர்கள் வரை, எவரும் கலை உணர்வோ, மேம்பட்ட சிந்தனையோ, சமூக அக்கறையோ, மக்களின் நல்வாழ்வு பற்றி கவலையோ கொண்டவர்கள் அல்லர். 'முதலீடு செய்பவர்களுக்கு அதிக லாபம் ஈட்டித் தருவது எப்படி?' என்ற ஒரே சிந்தனைதான் இன்றையத் தமிழ் சினிமாவின் சகல குணங்களையும் தீர்மானிக்கிறது. மற்றொரு விதத்தில் சொன்னால் பார்வையாளர்களை ஏமாற்றுவதில் பெறும் வெற்றிதான், இந்தத் துறையைச் சார்ந்தவர்களின் செல்வாக்கை உருவாக்குகிறது.

வணிக சினிமாவின் தரங்கெட்ட தனம் இந்திய மொழிப் படங்கள் அனைத்துக்கும் பொதுவான குணம் ஆகும். இருப்பினும் சீரழிந்த வணிக சினிமாவை, சிறந்த சினிமாவாகவும் அதன் தயாரிப்பாளர்களை கலைஞர்களாகவும், அரசாங்கமும், கல்வி நிலையங்களும் பத்திரிகைகளும் தூக்கி வைத்துக் கொண்டாடும் அவலம் தமிழ் நாட்டுக்கு மட்டுமே உரித்தான ஒரு தனி வியாதி ஆகும். இந்தியாவின் பிறமொழிகளில் வணிக

FREE E - BOOKS , www.thamizham.net.,

சினிமா தயாரிப்பாளர்களை அல்ல; சிறந்த சினிமாவை உருவாக்கியுள்ள அடூர் கோபாலகிருஷ்ணனும், அரவிந்தனும், மிருணாள் சென்னும் ஷியாம் பனகலும், சத்யஜித் ரேயும், பி. வி: கரந்துமே அரசாங்கத்தாலும் பத்திரிகைகளாலும் கல்வி நிலையங்களாலும் போற்றப்படுகிறார்கள்.

தமிழில் சினிமா என்பது சீரழிந்த, கலை உணர்வு அற்ற, வணிக நோக்கங்கள் மட்டுமே கொண்டவர்கள் சுருக்கு வழியில் பணம் கொள்ளையடிப்பதற்குக் கண்டு பிடித்த ஒரு உபாயம் ஆகும். தமிழில் தான் சீரழிந்த சினிமாவும் சீரழிந்த அரசியலும் ஒன்றிலிருந்து மற்றொன்றைப் பிரிக்க முடியாதபடி பின்னிப் பிணைந்து கிடக்கின்றன. நேற்றைய சண்டை நடிகர் இன்று கோடிக்கணக்கான மக்களின் தலைவிதியை நிர்ணயிக்கும் அரசியல் தலைவர் ஆகியிருப்பது போலவே, பாலுணர்வைத் தூண்டும் இன்றைய இரட்டை அர்த்த வசனகர்த்தாவோ மேல் நாட்டுப் படங்களிலிருந்து திருடும் இன்றைய இயக்குனரோ நாளைய கல்வி அமைச்சராக வரும் சாத்தியக்கூறும் இருக்கிறது.

சினிமா ரசனையில் ஒரு மாற்றம் நிகழ, தமிழகத்தில் முக்கியமான எல்லா ஊர்களிலும் சிறந்த சினிமாவை மக்களுக்குக் காட்டும் சினிமா சங்கங்கள் தோன்ற வேண்டும். கல்வித் துறை, பள்ளிகளிலும், கல்லூரிகளிலும் மாணவர்கள் சிறந்த உலகத் திரைப்படங்களையும் சிறந்த இந்தியப் படங்களையும் தொடர்ந்து பார்ப்பதற்கான வசதியை உருவாக்க வேண்டும். மேலான சினிமாவிலிருந்து பெறும் பேரனுபவம் தான் கீழான சினிமாவை வெறுத்து ஒதுக்க வைக்கும் மிக சக்தி வாய்ந்த வழியாக இருக்கும்.

● புதிய வகை 2 வண்ண அச்செழுத்துக்கள்
● எல்லா மொழி அச்செழுத்துக்கள்
● போஸ்டர் எழுத்துக்கள்
● எல்லா வித அச்சக உபகரணங்கள்

38, கட்டி தெரு, பெருமாள் பேட்டை, சென்னை-7. பேசி: 27087

FREE E - BOOKS , www.thamizham.net.,

## சுட்டி சந்தா

சுட்டி சந்தா 12 இதழ்கள் அஞ்சலில் பெற ரூ 7.00 பணவிடை செய்யுங்கள்.

## சுட்டி முகவரி

எல்லாத் தொடர்புகளுக்கும் சுட்டி
1494, அண்ணாநகர், சென்னை 600 040

## முன் இதழ்கள்

இதழுக்கு 45 காசு விதம் அஞ்சல் தலை/பணவிடை அனுப்பினால் அஞ்சலில் உங்களுக்கு வந்து சேரும்.

சுட்டி முன் இதழ்கள் எண் 1 முதல் 28, 30, 54 தவிர பிற இதழ்கள் யாவும் கிடைக்கும். 50 வது இதழ் 0.75 காசு

## சுட்டி இலவசம்

சுட்டி இலவசம்: சுட்டியைக் கேள்விப்படாத, விரும்பி ஏற்கக் கூடிய நண்பர்களின் முகவரிகளை அனுப்புங்கள். அவர்களுக்கு உங்கள் சார்பில் ஒரு மாதிரி இதழ் இலவசமாக அனுப்புகிறோம். எவ்வளவு முகவரிகள் வேண்டுமானாலும் அஞ்சலட்டையில் எழுதி அனுப்பலாம்.

## சுட்டி வரவில்லை

சுட்டி ஒழுங்காக வந்து சேருவதில்லை என்று சில சந்தாதாரர்கள் மௌனமாகக் குறைபட்டுப் பயனில்லை. என்ன முயற்சி எடுத்தும் சில சுட்டி இதழ்கள் அஞ்சலில் திருடப்படுவது தவிர்க்க முடியாதிருக்கிறது. சந்தா முடிய காலமிருந்தும் 15 ஆம் தேதிக்குள் சுட்டி கிடைக்கப் பெற சந்தாதாரர்கள் சந்தா எண் குறிப்பிட்டு (மறந்தால், பெயர் முகவரி) எழுதினால் மீண்டும் ஒரு முறை அனுப்புகிறோம். வேறு வழியில்லை.


# ஏஜெண்டுகள் தேவை

தரமான
"தாஜ் மஹால்"
சுகந்த சுபாரி
பாக்குத்தூள்


"ஓமக்ஸ்"
கிளீனிங் பவுடர்
ஆகியவற்றை
விற்பனை செய்ய
தமிழகமெங்கும்
ஏஜெண்டுகள்
தேவை.

விபரங்களுக்கு:

M/S
**லெட்சுமி - கல்யாண் ஏஜென்சீஸ்**
19, ஜானிஜான் கான் ரோடு,
சென்னை - 600014.

போன்: 846382


FREE E - BOOKS , www.thamizham.net.,





ஆசிரியர்: கு. நாராயண பாரதி, வெளியிடுபவர்: கி. ராமச்சந்திரன், 1494 - அண்ணா நகர், (13-வது மெயின் ரோடு) சென்னை - 600040. அச்சிட்டோர்: எஸ். எம். ரவீந்திரன். ரவீந்திரன் பிரஸ், 137, பெ. நடேசன் ரோடு, திருவல்லிக் கேணி - சென்னை - 600005.

FREE E - BOOKS , www.thamizham.net.,

[illegible]: மாத இதழ் | JULY 1986 Regd. No. TN/MS(N)/317
Licensed to post without prepayment Licence No. TN/MS(N)WPP-[illegible]

http://www.thamizham.net FREE E - BOOKS (TAMIL)



# A PACE SETTER for RURAL PROSPERITY

SAKTHI SUGARS has engineered a breakthrough in sugarcane production with innovative technology and the farmers have achieved a successive increase in yield of sugarcane to 45 tonnes from 28 tonnes to earn an additional income of Rs. 3,000/-Per acre.

SAKTHI SUGARS has enriched the springs of rural life by distributing over Rs. 20 crores as sugarcane price annually to over ten thousand farmers (a bulk of Whom are small and marginal farmers) and generating gainful rural employment to over fifty thousand families in the primary, secondary and tertiaray sectors.

SAKTHI SUGARS has promoted a number of rural development programmes (I) Sakthi High School Provides a conducive environment for study and development of rural children. (II) Sakthi Institute of Technology promotes the technical skill of the youth, and (III) V. M. Kailasam Hospital provides medical care for the region.

Head Office:
73-A, Race Course Road,
Coimbatore-641 018.

Reg. Office & Factory:
Sakthinagar-638 315.
Periyar District

FREE E - BOOKS , www.thamizham.net.,